உ

சிவ சிவ　　சிவமயம்　　சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

# அருள்மிகு மீனாட்சி அம்பாள் உடனுறை
# அருள்மிகு சுந்தரேஸ்வரர் என்கிற
# அருள்மிகு படியளந்தநாயகி சமேத
# அருள்மிகு செட்டியப்பர் திருக்கோவில்

**32. அய்யன்பேட்டை,** நன்னிலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்,















## நூதன ராஜகோபுர
## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக
# பத்திரிகை

நாள் : பங்குனி மாதம் 29-ம் தேதி (12.04.2026) ஞாயிற்றுக்கிழமை

திரு.

அவர்கள்

### விநாயகர் துதி

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

சம்பந்தர் தேவாரம்.

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே
இறைவ ராயினீர், மறைகொள்மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே
காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழு மொழிகளே

மற்றைநாள் தம்பிரான் கோயில் புக்கு
வாசிதீர்த்து அருளும் எனப் பதிகம் பாடிப்
பெற்றபடி நல்காசு கொண்டு மாந்தர்
பெயர்ந்து போய் ஆவணவீ தியினில் காட்ட
நல்தவத்தீர் இக்காசு சால நன்று
வேண்டுவன நாம் தருவோம். என்று நல்க
அற்றைநாள் தொடங்கி நாட் கூறு தன்னில்
அடியவரை அமுதுசெய்வித்து ஆர்வம் மிக்கார்.
பெரிய புராணம்
திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் 570



அட்டதிக் கினுமுலகி லிடுசராசரமேலிந்
தாருயிர்பதைப்ப வாடி
அங்கமே சோர்ந்திடும் வறுமைவந்திடுங்
காலமவ்வினைவளர் கன்னலின்
கட்டுதீம்பால்கொழுங் கனிசெந்நெலன்
னங்களிப்பினொடு தொண்டருண்ணக்
கண்காட்சிபெருப்பேட்டை கட்டிய
நவநிதியமுங்
கணக்கில் பலசரக்கு நிறையச்
செட்டியப்பாரென்று பேர்கொண்டு
விற்பதிற் சேர்வட்ட வாசிப்பார்த்துத்
தினமுமிப்படியுனது கணவன்
விற்பனைசெயகச்
செய்துதிகழ் சம்பந்தர்சொற்
சட்டமிகு அப்பர் சொற்பாடல் கொண்டருள்
செல்வி சப்பாணிகொட்டியருளே
தங்கப்படிகாசு பங்கிட்டு வைத்த கிளி
சப்பாணி கொட்டியருளே
அழகிய மாமுலை அம்மை பிள்ளைத்தமிழ்
சப்பாணி பருவம்
காழி ஞான தேசிகர்
பிள்ளைத்தமிழ் திருச்சிற்றம்பலம்.

---

## *நூதன ராஜகோபுர அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

உயர்திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு துணை முதலமைச்சர்

உயர்திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்களின்

சீர்மிகு பொற்கால ஆட்சியில்

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

உயர்திரு **பி.கே.சேகர்பாபு** அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறும்.

திரு. **வை.செல்வராஜ்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், நாகை

திரு. **பூண்டி.கே.கலைவாணன்** அவர்கள்,
சட்டமன்ற உறுப்பினர், திருவாரூர்.

திரு. **இரா.காமராஜ்** அவர்கள்,
சட்டமன்ற உறுப்பினர், நன்னிலம்.

திரு. **வே.குமரேசன்** பி.எஸ்சி.பி.எல்., அவர்கள்,
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, நாகை

திருமதி. **ப.இராணி** பி.ஏ.இபி.எல்., அவர்கள்,
துணை ஆணையர் (நகை சரிபார்ப்பு அலுவலர்)
உதவி ஆனையர் (கூடுதல் பொறுப்பு)
இந்து சமய அறநிலையத்துறை, நன்னிலம்.

திரு. **மு.கருணாநிதி** பி.காம்., அவர்கள்,
ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை, நன்னிலம்.

திரு. **மு.வி.ப.பாலகுமார்**
பரம்பரை முறை வழி சாரா அறங்காவலர், அய்யன்பேட்டை.

திரு. **R.கைலாச குருக்கள்** அவர்கள்,
ஆலய அர்ச்சகர், அய்யன்பேட்டை.

# திருத்தலப் பெருமை

திருஞான சம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசர் பெருமானும் தலங்கள் தோறும் சென்று வழிபாடாற்றப் போகும்போது பெருமளவு சிவனடியார்கள் பல்வேறு பணிகளை ஏற்று செய்திட உடன் செல்வது வழக்கம். பல தளங்களையும் வணங்கி திருவீழிமிழலையில் இறைவனை போற்றிப் பாடி பிரிய மனமின்றி நாவுக்கரசர் பெருமான் ஒரு திருமடத்திலும் ஞானசம்பந்தர் ஒரு திருமடத்திலும் அடியவர்களுடன் தங்கி வழிபட்டிருந்தனர். காலநிலையால் உணவு பஞ்சம் ஏற்பட்டது. இறைவனார் தமிழோடு இசை கேட்கும் இச்சையால் மேலும் சில காலம் இருவரையும் மிழலையில் தங்கச் செய்யும் நோக்குடன் கனவில் இருவருக்கும் தோன்றி தாம் அளிக்கும் பொற்காசு பெற்று அடியவர் வாட்டம் தீக்குமாறு அருளினார்.

திருஞானசம்பந்தருக்கு கீழ்ப்பீடத்திலும், திருநாவுக்கரசு பெருமானுக்கு மேற்கு பீடத்திலும் தலா ஒரு பொற்காசு ஒவ்வொரு நாளும் அருளப்பட்டது. ஆவண (வணிக) வீதியாக இந்தத் தலமான அய்யன்பேட்டை வந்து உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்ய இரண்டு மடத்தின் அடியவர்களும் தனித்தனியே வந்து பொருள் பெற்றுச் செல்கிறார்கள். அய்யன்பேட்டை தல இறைவன் ஒரு திருவிளையாடல் நிகழ்த்தி ஒரு ஒப்பறிய ஞானத்தை உலகுக்கு அளிக்க திருவுள்ளம் பற்றுகிறார். அவரே செட்டியாராக வணிகர் கோலம் கொள்கிறார். அம்மை படி அளந்த நாயகியாக கோலமேற்கிறார். திருநாவுக்கரசு சுவாமி திருமட அடியவர் கொணரும் பொற்காசினை சுத்த தங்கம் என ஏற்று உடனடியாக பொருள் வழங்கி அனுப்புகிறார். திருஞானசம்பந்தர் திருமட அடியவர் கொணரும் காசினை உரைத்துப் பார்த்து செப்புக்கலப்பு அதிகம் உள்ளதாக கூறி இருப்பினும் ஏற்று மதிப்பிட்டு காலம் தாழ்த்தி பொருட்களை தருகிறார். திருநாவுக்கரசர் திருமடத்தில் உரிய காலத்தில் பூஜை ஆகி அடியவர்களுக்கு அமுது படைக்கப்படுகிறது. திருஞானசம்பந்தர் திருமடத்தில் காலம் மிகத்தாழ்கிறது. விவரம் வினவி அறிகிறார். திருநாவுக்கரசர் தொண்டால் பெரும் காசாம் என இறையருளால் உணர்கிறார். இத்திருவிளையாடலால் திருத்தொண்டில் உயர்நிலை சிறப்பையும், தொண்டர்களுக்கு இறைவன் அருளும் வண்ணமும் உயர்நிலை ஞானமாக உணர்த்தப்படுகிறது.

எல்லாம் வல்ல பரம்பொருளே தம் உயர்நிலையில் இருந்து இறங்கி வந்து தான் வணிகனாகவும் தம் சக்தி வணிகப் பெண்மணி ஆகவும் திருக்கோலம் கொண்டு அற்பதம் நிகழ்த்திய பெருமைக்குரியது இத்தலம். மூலநாயகரின் சக்தி வெளிப்பாடாக சுவாமி அமர்ந்த நிலையில் ஒரு கையில் துலாக்கோல் (தராசு) ஏந்தியும் அம்மை நின்ற கோலத்தில் படி அளவிடும் பாத்திரம் ஏந்தி நிற்கும் கோலமும் ஒப்பிட இயலா அருமைப்பாடுடைய காட்சியாகும்., பின் மதுரையில் நிகழவிருந்த அற்புதங்களுக்கு முன் அற்புத நிகழ்வாக மூலவர்களுக்கான ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வர ஸ்வாமியே இத்தலத்தில் இந்த அற்புத நிகழ்வை நிகழ்த்தியது கருத்தில் எண்ணத்தக்கது.

இந்த வரலாற்றுப் பெருமை அறிந்த இத்தலத்தில் வாழும் மக்களும் இத்தல இறைவனை பெரிதும் கொண்டாடி அருள்பெற்று வருகின்றனர். ஆண்டுதோறும் சித்திரை மாதம் பரணி நட்சத்திரத்தன்று வணிகப் பெருவிழா இத்தலத்தில் வாழும் மக்களாலும் வெளியூர் வணிகப் பெருமக்களாலும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு மாத பரணி நட்சத்திரத்திலும் வணிகர்களும் பொதுமக்களும் அபிஷேக ஆராதனைகளிலும் சகஸ்ர நாமா அர்ச்சனையிலும் கலந்து கொண்டு பயன் அடைவது வழக்கமாக உள்ளது. ஸ்ரீபைரவர் இத்தலத்தில் அரிய திருமேனி தாங்கி அருளிவருகிறார். சிறப்பு பூஜைகள் அஷ்டமி நாட்களில் நடைபெறுகின்றன. நாய்க்கடி இதர விஷக்கடிகளுக்கு ஆட்படுவோர் பைரவர் அருளால் இவ்வூர் அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தில் மந்திரிக்கப்பட்டு நலம் பெறுகின்றனர்.

தல விருட்சம் : **வில்வம்**

தீர்த்தம் : **பொற்றாமரைக்குளம் மற்றும் அரசலாறு**

இத்தகைய பெருமைகளுக்கும் உரிய இத்திருக்கோவிலை கிராமத்தார்கள் பக்தர்கள் ஒத்துழைப்புடன் நூதன ராஜகோபுரம் திருப்பணிகள் செய்து இறைவன் திருவருள் கூட நிகழும் விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 29-ஆம் நாள் 12-04-2026 ஞாயிற்றுக்கிழமை தசமி திதியும், திருவோண நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபதினத்தில் நிகழ்ச்சி நிரலில் கணடவாறு யாக பூஜைகள் செவ்வனே செய்து காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மிதுன லக்னத்தில் மஹா கும்பாபிஷேகம் நூதன ராஜ கோபுர புணராவரத்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் வேத சிவாகம திருமுறை நாதகானம் முறைப்படி நிகழ்முறையில் காணும் வண்ணம் இறைவன் துணை கொண்டு சிறப்பாக நிகழ உள்ளது.

இவ்விழா காஞ்சி காமகோடி பீடம், தமிழக சைவ ஆதீனங்களின் ஸ்ரீகுரு மகா சன்னிதானங்கள் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அறநிலையத்துறை அலுவலர்கள் அரசு உயர்அலுவலர்கள் மாண்புமிகு நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பக்தர்கள் உபயதாரர்கள் கிராமவாசிகள் பங்கேற்புடன் நிகழ்கிறது. அனைத்து பெருமக்களும் இத்திருக்குட நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழாவில் அனைவரும் கலந்து கொண்டு பேரானந்த பெருவாழ்வு பெற அன்புடன் அழைக்கிறோம்.

இப்படிக்கு

**கிராமவாசிகள் & கிராம பரிபாலன சபையினர்**

மற்றும் **அருள்மிகு செட்டியப்பர் நற்பணி மன்றம்.**

32.அய்யன்பேட்டை

**M.கருணாநிதி** தக்கார்

இந்து சமய அறநிலையத்துறை

ஆய்வாளர்

**மு.வி.ப.பாலகுமார்**

பரம்பரை முறை வழி சாரா அறங்காவலர்,

அய்யன்பேட்டை

செல்: 99420 25012

**திரு. R.கைலாச குருக்கள்**

ஆலய அர்ச்சகர், அய்யன்பேட்டை.

நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி:

Name : AM SETTIYAPPAR NARPANI MANDRAM

A/c No: 725304121 (Savings A/c)

Bank : The Central Co-Operative Bank

Branch : Peralam (10411)

IFSC Code : TNSC0010400

# நூதன ராஜகோபுர மகா கும்பாபிஷேக
# சிறப்பு அழைப்பாளர்கள்
# ஆசியுரை வழங்குவோர்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்**

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்

**ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரியார் சுவாமிகள்**

திருக்கயிலாய பரம்பரை  தருமபுர ஆதீன கர்த்தா

**ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள்**

திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம்

**ஸ்ரீலஸ்ரீ சத்ய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரியார் சுவாமிகள்,** திருப்புகலூர்.

திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் கயிலை மாமுனிவர்

**ஸ்ரீலஸ்ரீ சபாபதி சுவாமி தம்பிரான் சுவாமிகள்**

கல்யாணபுரி ஆதீனம்

**ஸ்ரீலஸ்ரீ இராஜ சரவண மாணிக்கவாசக சுவாமிகள்,** கூனம்பட்டி.

சிவஸ்ரீ வேத சிவாகம சிவாச்சார்ய குருமார்கள்

**ஆச்சார்ய பண்டிதர்கள்**

## இறைபணியில்

**எஜமான் ஸ்ரீபாண்டி முனீஸ்வரர் சிலமலை**, தேனி மாவட்டம்.

முனைவர் சிவத்திரு. **இராச.வசந்தகுமார்** அவர்கள்

வேந்தர் கற்பகம் பல்கலைகழகம், கோவை

திரு. **கா.சேகர்** அவர்கள் கோமல் ஓம் நமச்சிவாய அறக்கட்டளை

திரு. **S.முத்துசுவாமி** அவர்கள், தலைமை ஆசிரியர்(ஓய்வு) RAபுரம்.

திரு. **கணேஷ் கோபால்** அவர்கள் துபாய்

திரு. **சக்திவேல்** அவர்கள் கோவை



## யாகசாலை நிகழ்ச்சி நிரல்

பங்குனி 2-ஆம் தேதி (16-03-2026) திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் 10.30 மணிக்குள்

பந்தக்கால் முஹூர்த்தம்

பங்குனி 23-ஆம் தேதி (06-04-2026 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு

ஸ்ரீவெள்ளவாரண விநாயகர், ஸ்ரீ இரணபத்ர காளியம்மன் பிரார்த்தனை, முளைப்பாலிகை இடுதல்

பங்குனி 24-ஆம் தேதி (07-04-2026) செவ்வாய்கிழமை ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவில் பிரார்த்தனை

| | தமிழ் மாதம் தேதி | ஆங்கில மாதம் | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|---|
| பங்குனி மாதம் | 25 | 08-04-26<br>புதன் | காலை 9.00 மணி | விநாயகர் அபிஷேகம்<br>அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, புண்ணியாகவாசனம்<br>கோ பூஜை, தன பூஜை, ப்ரசன்ன கணபதி ஹோமம்<br>லட்சுமி ஹோமம், நவக்ரக சாந்தி, கஜபூஜை,<br>அஸ்வ பூஜை, தீபாராதனை, |
| | | | மாலை 5.00 மணி | ரக்ஷோக்ன ஹோமம், ப்ரவேச பலி<br>கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, |
| | | | மாலை 7.00 மணி | மிருத்சங்கீரணம், அங்குர பூஜை, தீபாராதனை, |
| | 26 | 09-04-26<br>வியாழன் | காலை 8.00 மணி | சாந்தி ஹோமம், திசா ஹோமம், ஸம்ஹிதா ஹோமம்,<br>மூர்த்தி ஹோமம், மிருத்யுஞ்சய சாந்தி,<br>ஆசார்ய தசவித ஸ்நானம், ஆசார்ய வர்ணம்,<br>ஆசார்ய ரக்ஷாபந்தனம், அக்னி சங்கீரணம்<br>தீர்த்த சங்கீரணம், பரிவார தேவதை, கலாகர்ஷணம். |
| | | | காலை 10.00 மணி | பிரசன்னாபிஷேகம் |
| | | | பகல் 11.00 மணி | விமான கலச ஸ்தாபிதம் |
| | | | மாலை 5.00 மணி | விஷேச சந்தி, யஜமான சங்கல்பம் |
| | | | மாலை 6.00 மணி | கும்பாலங்காரம், பூதசுத்தி |
| | | | இரவு 7.00 மணி | கலாகர்ஷணம், யாத்ரா தானம், கிரக ப்ரீதி யாக சாலை ப்ரவேசம் |
| | | | இரவு 8.30 மணி | சமீத் அன்னம் ஆஜ்யம், திரவியாகுதி |
| | | | இரவு 9.00 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 1 |
| | 27 | 10-04-26<br>வெள்ளி | காலை 7.30 மணி | விஷேச சந்தி, யாக பூஜை துவக்கம் |
| | | | காலை 10.00 மணி | அஷ்டபந்தனம் சமர்ப்பணம் |
| | | | காலை 10.30 மணி | சமீத் அன்னம் ஆஜ்யம், திரவியாகுதி |
| | | | காலை 11.00 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 2 |
| | | | மாலை 5.00 மணி | விஷேச சந்தி, யாக பூஜை துவக்கம் |
| | | | மாலை 6.00 மணி | திருவிளக்கு பூஜை, லட்சுமி பூஜை, ஹோமம், கன்யா பூஜை,<br>சுவாஸினி பூஜை, தம்பதி பூஜை, வடுக பூஜை |
| | | | இரவு 8.00 மணி | சமீத் அன்னம் ஆஜ்யம், திரவியாகுதி |
| | | | இரவு 9.00 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 3 |

| தமிழ் மாதம் தேதி | ஆங்கில மாதம் | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| 28 | 11-04-26 | காலை 7.00 மணி | விஷேச சந்தி, யாக பூஜை துவக்கம். |
| | சனிக்கிழமை | காலை 10.00 மணி | சமீத் அன்னம் ஆஜ்யம், திரவியாகுதி |
| | | காலை 11.00 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 4 |
| பங்குனி மாதம் | | மாலை 5.00 மணி | விஷேச சந்தி, யாக பூஜை துவக்கம் |
| | | இரவு 7.30 மணி | சமீத் அன்னம் ஆஜ்யம், திரவியாகுதி, வஸ்தரம் சமர்ப்பணம், |
| | | இரவு 8.00 மணி | பிம்பசுத்தி, மூர்த்தி ரக்ஷாபந்தனம் |
| | | இரவு 9.00 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 5 |
| 29 | 12-04-26 | காலை 5.00 மணி | யாக பூஜை துவக்கம் |
| | ஞாயிறு | காலை 7.00 மணி | விஷேச சந்தி, தத்வார்ச்சனை, ஷடங்க நியாசனம் |
| | | காலை 8.00 மணி | நாடி சந்தானம், ஸ்பர்சாகுதி, |
| | | காலை 8.30 மணி | சமீத் அன்னம் ஆஜ்யம், திரவியாகுதி |
| | | காலை 8.45 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை காலம் - 6 |
| | | காலை 9.00 மணி | யாத்ரா தானம், கிரகப்ரீதி கடம் புறப்பாடு |
| | | காலை 9.20 மணி | ரிஷப லக்னம் : ஸ்ரீஅய்யனார், பிடாரி அம்மன் கும்பாபிஷேகம் |
| | | காலை 10.00 மணி | மிதுன லக்னம் : சிவாலய ராஜகோபுரம் விமானங்கள் மஹா கும்பாபிஷேகம் |
| | | காலை 10.15 மணி | மிதுன லக்னம் : மூலப்ரதான மூர்த்திகள் மஹா கும்பாபிஷேகம் |
| | | காலை 11.30 மணி | மகாபிஷேகம் ஜெபம், ப்ரசாதம் வழங்குதல் |
| | | காலை 11.45 மணி | ஆச்சார்யார் உற்சவம் |
| | | மதியம் 12.00 மணி | அன்னதானம் நடைபெறும் |
| | | மாலை 6.00 மணி | திருக்கல்யாணம் |
| | | இரவு 8.00 மணி | திருவீதியுலா நடைபெறும். |
| 30 | 13-04-26 | திங்கட்கிழமை முதல் | முதல் மண்டலாபிஷேக பூஜை நடைபெறும். |

யாகசாலை பூஜை காலங்களில் திருமுறை பாராயணம், நாதஸ்வரம், ஆகம மூல மந்திர ஜபம்,
வேத மந்திர பாராயணம், சிறப்பு சொற்பொழிவுகள் நடைபெறும்

## கும்பாபிஷேக யாக பூஜை தலைமை ஏற்று நடத்திகொடுப்பவர்கள்

கைலைமணி, பைரவர் உபாசகர்
**திரு. R.கைலாச சிவாச்சாரியார்,**
அய்யன்பேட்டை. செல்: 9715166 712

சிவகாமபிரவீன் ஜோதிடர் கைலைமணி,
**திரு. R.அய்யப்ப சிவாச்சாரியார்,**
வடபழனி. செல்: 9841341190

திருவாசக செந்நாவலர்
கலைமாமணி மயிலை **பா.சற்குருநாதன்,** ஓதுவார்
தேவார இசைமணி வடபழனி **த.அருண்கார்த்திக்,** ஓதுவார்

சிவகாம வித்வான் ஜோதிட சிரோண்மணி
கும்பாபிஷேக கலாநிதி
**திரு. R.சுவாமிநாத சிவாச்சாரியார்**
வடபழனி. செல்: 7401074193

தொடர்புக்கு :
**திரு. K.சுரேஷ் குருக்கள்**
32.அய்யன்பேட்டை
செல்: 9444729192 9715166712



| | | |
|---|---|---|
| ஸ்தபதியார் | : | **R.ஜெயப்பிரகாஷ்,** கடகக்குடி – செம்மங்குடி. |
| வர்ண வேலை | : | **T.சண்முகானந்தம்** அரசு பதிவுபெற்ற வர்ண ஓவியர், |
| நாதஸ்வரம் | : | தவில்வித்வான் **T.P.N.கணேசன்** குழுவினர், கீரனூர். |
| பந்தல் அமைப்பு | : | **K.லெட்சுமணன்,** முடிகொண்டான். |
| ஒளி, ஒலி அமைப்பு | : | **P.சிவகுமார்,** S.R.S.ஆடியோஸ், 34.கூத்தனூர். |

இரவி ஆப்செட், பூந்தோட்டம் செல் 9443000365